[1990 சனவரி 25

திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை கடலூர் மாவட்டக் கூட்டத்தில் வந்தபோது அங்கே வந்த ஆலோசனையில் மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றவர்களும் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து ஒரு குழுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து பேசி, அதன்மூலமாக நடவடிக்கை எடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவு முடிவு அங்கேயிருந்து அரசுக்கு வந்திருக்கிறதா ? அப்படிப்பட்ட அங்கே எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் நாங்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க இருக்கிறோம். அதற்கான நடவடிக்கையெடுத்து முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போடலாம். இருப்பினும் அந்தச் சாலைகளை, நம்முடைய தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலை, கிழக்கு கடற்கரை சாலை மற்றும் கிராமச் சாலைகள் அவர்களே, இந்தப் பிரச்சினை தீர்க்கிறவரையில் பராமரிக்கலாம் என்ற குறிப்பை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்தச் சாலைகள் பராமரிக்கப்பட நடவடிக்கையெடுக்கப்படும்.

பரம்பிக்குளம், ஆளியாறு நீர்ப்பாசனத் திட்டம்.

*870— திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பரம்பிக்குளம், ஆளியாறு நீர்ப்பாசனத் திட்டத்தில் பெரியார் மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி மற்றும் நம்பியூர் வறட்சிப் பகுதிகளை சேர்த்துக்கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1990 சனவரி 25]

(ஆ) அவைகள் கடந்த பல ஆண்டுகளாக செப்பனிடப் படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உள்ள சாலைகள் 70.

(ஆ) இவற்றுள் 62 சாலைகள் தனியார் சர்க்கரை ஆலைப் பகுதியில் அமைந்துள்ளன. இவ்வாலைகள் அரசுக்குக் கரும்பு மேல்வரிப் பணம் செலுத்த மறுத்து அரசுக்கு எதிராக வழக்கு தொடுத்துள்ளதால் அரசின் ஆணையின்படி கடந்த 3 ஆண்டுகளாக இவ்வாலைப் பகுதியில் உள்ள சாலைகள் பராமரிக்கப்படவில்லை. மற்ற 8 சாலைகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவரவர்களே, கரும்பு செஸ்ஸைக் கட்ட மறுத்து உயர்நீதிமன்றத்தில் ஆலை அதிபர்கள் தடை உத்தரவு பெற்றிருக்கிறார்கள். அது எந்த நேரத்தில் பெற்றது? கிட்டத்தட்ட பத்தாண்டுக் காலத்திற்கு முன்னால் பெற்ற அந்தத் தடை உத்தரவை நீக்க முந்தைய அரசும் நடவடிக்கையை எடுக்கவில்லை; இந்த அரசும் எடுக்க வில்லை. ஏராளமான சட்ட நிபுணர்கள், அட்வகேட்-ஜெனரல்களையெல்லாம் வைத்துக் கொண்டு, அந்தத் தடை உத்தரவை ரத்து செய்வதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு ஏன் முன்வரவில்லை? அதனால் இந்த 62 சாலைகளில் விவசாயிகள் வண்டியில் கரும்பை ஏற்றி வருவதற்கும் கஷ்டப்படுகிறார்கள். வெட்டிய கரும்பை எடுத்து வருவதற்கும் கஷ்டப்படுகிறார்கள். இச்சாலைகளில் பஸ் போக்குவரத்தும் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சாலைகளை ரிப்பேர் செய்வதற்கு உடனே அந்தத் தடையை ரத்து செய்வதற்கு நடவடிக்கையை எடுக்கவும், அது முடியாவிட்டால் ஏதாவது வேறு நிதியிலிருந்தாவது இந்தச் சாலைகளைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

9.45 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆலை அதிபர்களை அழைத்து இதுபற்றி பேசியிருக்கிறார்கள். மேலும் இந்த வழக்குகள் விரைவாக முடிக்கப்பட வேண்டுமென்று அரசு வழக்கறிஞர்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டு விரைவில் இந்த வழக்குகள் முடிவு பெறும் என்ற நம்பிக்கையும் அரசுக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்புடைய வினாவாகக் கேட்க வேண்டும்.

9—50 மணி

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, நதிகளை எல்லாம் தேசியமயமாக்குகிற திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னோடியாக நின்று மத்திய அரசை வற்புறுத்துவாரா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வது, கடுமையான வறட்சி அங்கே இருக்கிறது. லட்சக் கணக்கான விவசாயிகள் குடிபெயர்ந்து வெளியே போகிற சூழ்நிலை அங்கே உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வருவார்களானால், அந்த ஏரியாக்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று காட்டுவதற்கும், உடன் இருந்து பணியாற்றுவதற்கும் நான் கடமைப்பட்டு இருக்கிறேன். . .

9.50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் வருவார்களா என்று கேட்கிறார்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து ஆய்வு செய்யவேண்டும் என்று. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆகவே வருவதற்கு முயல்வார்களா என்று கேட்கிறார்கள். இன்றைக்கு, நேரத்திற்கு வறட்சி அதிகம் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதிக்கு என்னை அழைத்தால், நான் நிச்சயமாக வருவேன்.

பாலம் கட்டுதல்.

*3142—திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் திருபுவனம் பேரூராட்சி, திருவிசநல்லூர் ஊராட்சிகளை இணைத்து காவிரி, வீரசோழன் ஆறுகளில் பாலம் கட்ட பகுதி இரண்டு திட்டத்தில் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டி முடிக்கப்படும்?